தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.trfswiss.com / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2022

## 13 வயதுப்பிரிவு

(01.01.2009 – 31.12.2010 வரையில் பிறந்தோர்)

### மாவீரம் தமிழீழ மண்ணின் மகுடம்

வானம் உள்ளவரை மாந்தர் வாழ்வென்றால் எங்கள் வானம் மாவீரர். மானம் உள்ளவரை தமிழர் மூச்சென்றால் எங்கள் மூச்செல்லாம் மாவீரர். தமிழ் ஆள, தமிழீழம் மீளத் தம்முயிர் தந்தவர்கள் மாவீரர்கள். அடிமை விலங்குடைக்கப் போர்க்கோலம் பூண்டு, பெரும்பகையை எல்லாம் முகங்கொண்டு, சுதந்திரக் காற்றை நாம் சுவாசித்த காலத்தை உருவாக்கிய மாவீரம் அவர்களின் அடையாளம்.

அடிமைப்பட்டு களையிழந்து சிதறிப்போன தமிழரெல்லாம், படைகொண்டு வீறுநடை போட்டு, பெரும் தடைதாண்டி, மண்ணிலும் விண்ணிலும் நீரிலும் கனலாகிக் களம் கண்ட வீரவரலாற்றை எமதாக்கியவர்கள் எங்கள் மாவீரர்கள். தமிழீழ விடுதலைக்கு விதையாகி, தமிழர் வாழ்வின் ஒளியானவர்கள் அவர்கள். அறத்தின் வழிநின்று தமிழினத்துக்கு அரண் அமைத்த புதல்வர்கள். இனிவரும் தமிழ்த் தலைமுறையினர் மார்தட்டிக் கொள்ளும் வரலாற்றுப் பெருமைகளைத் தந்த வீரர்கள்.

தலைவர் ஆணையிடத் தமிழர் சேனையென வீணர் கொட்டமடக்கி, அடிமை வாழ்வைத் தகர்த்து, காட்டிய வீரமெல்லாம் தமிழினம் ஈட்டிய வெற்றியென வரலாறு என்றும் முரசறையும். 'தாய்நிலமும் தாய்மொழியும் தமிழர் பண்பாடும் வலிமை மிக்கன' என முழங்கிய வீரர்களின் உறைவிடம் எம் தமிழீழ மண். இனவெறி எதிரிகளின் அடக்குமுறைக்கும் ஆக்கிரமிப்புக்கும் பணிய மறுத்த, உரிமை வேட்கை கொண்ட போராளிகளின் இருப்பிடம் எங்கள் தாய்மண். கந்தகக்குண்டு மழைக்குள் நின்று சமராடிய சந்தனப்பேழைகளின் வரலாற்றுப் பதிவிடம் எமது மண். அந்த அற்புத மண்ணாம் எங்கள் தமிழீழ மண்ணின் மகுடம் மாவீரமே!

எமது தேசத்தின் இளங்கீற்றே! எங்கள் சுவாசத்தின் உயிர்க்காற்றே! நாம் கோபுரமாய் சிறந்து நின்றாலும் எங்கள் அத்திவாரக் கற்களை ஒருபோதும் மறந்து வாழமாட்டோம். மாவீரர்களே! உங்கள் உதிரத்தால் தான் எங்கள் விடுதலை வரலாறு மகத்துவம் பெறுகிறது. உங்கள் அர்ப்பணிப்புகளால் எங்கள் போராட்டம் உன்னதம் பெறுகிறது. உங்கள் இலட்சிய உறுதியால் எங்கள் தேசியம் உருவாக்கம் பெறுகிறது. உங்கள் நினைவுகளால் எங்கள் உறுதி உரம் கொள்கிறது.

தமிழீழ விடுதலைப் போரிலே ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பத்து இரண்டு நவம்பர் இருபத்தேழு அன்று முதற்களப் பலியான மாவீரர் லெப்டினனன்ட் சங்கர் அவர்களின் நினைவாக, அனைத்து மாவீரர்களையும் ஒருசேர ஆண்டுதோறும் நவம்பர் இருபத்தேழாம் நாள் மாவீரர் நாளிலே சுடரேற்றி வணங்குகிறோம். நித்தமும் எங்கள் காவல் தெய்வங்களாக உங்களை எம் நெஞ்சறைக்குள் இருத்துகிறோம். நாம் வலிமை பெற்றவர்களாக இணைந்து எங்கள் தாயகத்தை மீட்க உங்கள் வரலாற்றுத் தடமும் நினைவுகளும் எங்களை என்றும் வழி நடத்தும். இது உறுதி.

நன்றி,
வணக்கம்.